பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 209

செவ்வாய்க்கிழமை
24 ஜூன் 2025

ஆனி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

யாழ்ப்பாணத்தில்

## பலத்த காற்று; 159 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன் தினம் மாலை வீசிய பலத்த காற்றுக் காரணமாக 45 குடும்பங்களைச் சேர்ந்த 159 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்

10



## செம்மணியில் உதயன்

விரிவு பக்கம்:- 11

செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி

# அணையா விளக்குப் போரில் அணி திரள்கின்றது தாயகம்!

இன்றும் பேரெழுச்சியுடன் தொடரும்



யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரியும், சர்வதேச கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி அகழப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும், சிவில் அமைப்பினரும் இணைந்து அணையா விளக்குப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

11

## சுகாதாரக் குறைபாடு; 190,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்கும் பலசரக்குக் கடையொன்றுக்கும் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
நல்லூர் சுகாதார மருத்து அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொதுச்சுகா

11

மூச்செடுக்கச் சிரமம்;

## 8 மாதக் குழந்தை சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 24
மூச்செடுக்கச் சிரமப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட எட்டு மாதக் குழந்தை சிகிச்சையின்போது நேற்றுக் காலை

10

## இரு மாதங்களுக்குத் தேவையான எரிபொருள்கள் இருப்பில் தாராளம்

செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தவேண்டாம் என பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஜூன் 24
நாட்டில் இரண்டு மாதங்களுக்குத் தேவையான எரிபொருள்கள் இருப்பில் உள்ளன. வடமாகாணத்துக்கும், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கும் போதியளவு எரிபொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன.
எனவே வரிசைகளில் நின்று தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தவேண்டாம் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஈரானின் அணு உலைகள் மீது அமெரிக்காவால் நடத்தப்

11

திருவுளச்சீட்டுமூலம்

## சாவகச்சேரி பிரதேசசபை தமிழரசுக் கட்சியின் வசம்

தவிசாளரானார் பொன்னையா குகதாசன்



யாழ்ப்பாணம், ஜூன் 24
சாவகச்சேரி பிரதேசசபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. இதன்படி, அந்தச் சபையின் தவிசாளராக

11



## வளைகுடாவில் போர் உச்சம்; வடக்கில் எரிபொருள் வரிசை!

யாழ்ப்பாணம், ஜூன் 24
ஈரானின் அணுவுலைகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, மத்திய கிழக்கில் மீண்டும் போர் உச்சம் பெற்றுள்ளது. பாரசீக ஜலசந்தியை மூடுவதற்கு ஈரான் திட்டமிட்டுள்ளதைத் தொடர்ந்து, வடக்கு மாகாணத்தில் எரிபொருளைப்

11

கிளிநொச்சி விபத்து

## இரண்டாவது நபரும் நேற்று உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 24
கிளிநொச்சி 155ஆம் கட்டைப்பகுதியில் கடந்த 21ஆம் திகதி எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு பயணித்த பாரவூர்தியும், மோட்

11

கட்சி முடிவுக்கு மாறாக நடுநிலைமை

## முன்னணியின் உறுப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை பாயும்

யாழ்ப்பாணம், ஜூன் 24
சாவகச்சேரி பிரதேசசபையின் தவிசாளர் தெரிவில் கட்சியின் முடிவுக்கு மாறாகச் செயற்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தமிழ்

11


### முச்சந்தி முரளி

'தட்டுப்பாடு இல்லை எண்டு சொல்லச் சொல்லத்தான் இஞ்ச வரிசையள் இன்னும் நீளுது கண்டியளோ'

இஸ்ரேல் – ஈரான் மோதல் எதிரொலி

## பாதுகாப்புச் சபையை உடனடியாகக் கூட்டுக

சஜித் வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 24
மத்திய கிழக்கில் இடம்பெற்றுவரும் போரால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கங்கள் குறித்து ஆராய்ந்து, அதற்குரிய தீர்வுத்

11

## பச்சிலைப்பள்ளியில் தமிழரசின் ஆட்சி!



கிளிநொச்சி, ஜூன் 24
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தவிசாளராக தமிழரசுக் கட்சியின் சு.சுரேன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.
இதையடுத்து, அந்தச் சபையில் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்தது. பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் முதலாவது அமர்வு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 23.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4111 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 11 21 30 75 |
| விசேட எழுத்து | R |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 23.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1178 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 31 33 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 23.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0137 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 5 5 9 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 23.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2217 |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 01 11 36 52 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 23.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5869 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 4 8 1 2 6 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 23.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1899 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 09 33 34 53 |
| விசேட எழுத்து | F |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 23.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0444 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 1 2 6 7 |

# நைஜீரியாவில் இருந்து பெற்றோலியப் பொருள்

## ஆராய்கின்றது இலங்கை

**கொழும்பு, ஜூன் 24**

**மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்துவருவதாலும், எரிபொருள் விநியோகச் சங்கிலியில் சீர்குலைவு ஏற்படும் என்ற கவலைகளாலும், நைஜீரியாவிலிருந்து பெற்றோலியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய இலங்கை முடிவுசெய்துள்ளது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

இஸ்ரேல் - ஈரான் பதற்றங்கள் அதிகரித்துவருகின்றன. இந்த மோதலில் அமெரிக்காவின் ஈடுபாடு காரணமாக எரிபொருள் விநியோகத்தில் புதிய நிச்சயமற்ற தன்மை உருவாகியுள்ளது.

இந்த நிலைமை தொடர்பாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ. ராஜகருணா, நைஜீரியா மற்றும் வேறு சில எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து மாதிரிப் பொருள்களைப் பெற்று, உள்ளூர் ஆய்வகங்களில் நம்பகத்தன்மையைச் சோதிப்பதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

விநியோகச் சங்கிலியில் ஏற்படும் இடையூறுகளிலிருந்து இலங்கைக்கு ஏற்படும் எந்தவொரு தாக்கத்தையும் தடுக்கும் முயற்சியாக இந்த நடவடிக்கை இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூர் சந்தையில் உடனடி தாக்கம் எதுவும் ஏற்படாது என்று தெரிவித்துள்ள அவர், தற்போதைய உலகளாவிய சீர்குலைவின் விளைவு எதிர்வரும் ஓகஸ்ட் அல்லது செப்ரெம்பர் மாதத்துக்குள் உணரப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ரஷ்யா இலங்கையுடன் எண்ணெய் வர்த்தகத்தை முன்னெடுக்க முன்வந்துள்ளது. இருப்பினும், பொருளாதாரத் தடைகள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவது நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இலங்கை கொள்கையளவில் அதற்கு உடன்பாட்டைக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 23.06.2025 | திங்கட்க்கிழமை | 0577 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| V | 6 2 1 2 9 2 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 23.06.2025 | திங்கட்க்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 2843 | S | 46 52 55 74 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 23.06.2025 | திங்கட்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 12 26 56 61 | 5004 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 23.06.2025 | திங்கட்க்கிழமை | |
| கன்னி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 11 18 51 59 | 4555 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 23.06.2025 | திங்கட்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| J | 08 | 09 16 48 74 | 2019 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 23.06.2025 | திங்கட்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 08 21 43 58 | 2669 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 23.06.2025 | திங்கட்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 06 30 49 62 | 2137 |

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொழும்பில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூன் 24

நாடு முழுவதும் உள்ள அனைத்து சிறைச்சாலை உயர் அதிகாரிகளும் கொழும்புக்கு அழைக்கப்பட்டு விசேட கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடல் நேற்றுக் காலை 8.30 மணிக்கு நீதி அமைச்சர் தலைமையில் நீதி அமைச்சில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் சுமார் இரண்டு மணித்தியாலத்துக்கும் அதிக நேரம் நடந்துள்ளது என்று தெரியவருகின்றது. அனைத்து சிறைச்சாலை அத்தியட்சகர்கள், ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

சிறைச்சாலைகளின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது. சிறைச்சாலைகள் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் அமைச்சர் அதிகாரிகளுக்கு விளக்கங்களை வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)



# விசாரணை வளையத்துக்குள் நிஸங்க சேனாதிபதி

கொழும்பு, ஜூன் 24

அவன்காட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்றுத் திங்கட்கிழமை காலை முன்னிலையானார்.

வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காகவே அவர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையானார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)



# மத்திய கிழக்கில் பதற்றத்தை தடுக்க உறுதியான நடவடிக்கை

## *அனைத்துத் தரப்பினரிடமும் இலங்கை வேண்டுகோள்*

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அனைத்துத் தரப்பினரையும் இலங்கை கேட்டுக்கொண்டுள்ளது. மத்திய கிழக்கின் சமீபத்திய பதற்றங்கள் தொடர்பாக இலங்கை கவலை வெளியிட்டுள்ளது. "நிலைமையைத் தணிக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்துத் தரப்பினரையும் நாங்கள் தொடர்ந்து கேட்டுக் கொள்கிறோம்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பேச்சுவார்த்தைக்குத் திரும்பி, அமைதியை நிலைநாட்டவும் பராமரிக்கவும் தீவிர இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட வேண்டும்" என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஏ-இ)

# நீதி அமைச்சுக்கு புதிய செயலாளர்

கொழும்பு, ஜூன் 24

நீதி அமைச்சின் புதிய செயலாளராக முன்னாள் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று அறிவித்துள்ளது. நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஓய்வுபெற்றதை அடுத்து, அவருக்குப் பதிலாக ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார். (ஏ-இ)

## வருமானவரி ஏய்ப்பு வழக்கு

# வாஸ் குணவர்த்தனவுக்கு நீதிமன்றம் பிடியாணை!

கொழும்பு, ஜூன் 24

வருமானவரி செலுத்தாமை தொடர்பாக உள்நாட்டு வருவாய் ஆணையாளர் தாக்கல் செய்த வழக்கில் முன்னிலையாகத் தவறிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்தது.

சுமார் 3.69 மில்லியன் ரூபா வருமான வரி செலுத்தாமைக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2010-2012 ஆண்டுகளுக்கான வருமானவரி செலுத்தாதமை தொடர்பாக உள்நாட்டு வருவாய் ஆணையர் 2023 ஆம் ஆண்டு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்குத் தொடுப்பவர் தரப்பில் முன்னிலையான தினேஷ் பெரேரா, பிரதிவாதிக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஆனால் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்த கூடுதல் நீதிபதி பவித்ரா சஞ்சீவனி பதுராஜா, பிரதிவாதியை நீதிமன்றத்தில் முற்படுத்த உத்தரவிட்டு பிடிவிறாந்து பிறப்பித்தார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபர் திணைக்களம் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள்!

## விசாரணைகளை ஆரம்பித்தது சி.ஐ.டி

**கொழும்பு, ஜூன் 24**

**சட்டமா அதிபர் திணைக்களப் பணியாளர்கள்மீது சமூக ஊடகங்களில் பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன என்று சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

பதவி உயர்வுக்காகக் காத்திருக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள்மீதே சமூக ஊடகங்களில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. பிள்ளையான் எனப்படும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு பிணை வழங்குவதை ஆதரித்தார் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர்மீது சமூக ஊடகங்களில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

அதேபோன்று, கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பான வழக்கில், சிரேஷ்ட அதிகாரிக்குப் பதிலாக கனிஷ்ட அதிகாரியொருவரை சட்டமா அதிபர் திணைக்களம் பிரதிநிதித்துவப்படுத்தியது என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாகவே குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (எ-இ)

# மாவாப் பாக்கு விற்பனை; ஒருவர் கைது

**யாழ்ப்பாணம், ஜூன் 24**

கஞ்சா கலந்த மாவாப் பாக்கு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் புறநகர்ப் பகுதியில் கஞ்சா கலந்த மாவாப் பாக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிலோ மாவாப் பாக்குக் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுவருகின்றார் என்றும் தெரிவித்தனர். (எ-26)



# இலங்கை – சீனா இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துறையின் ஒத்துழைப்புக்காக இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிருஷாந்த அபேசேனவும், சீனாவின் சார்பாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் இன் ஹெஜுனும் கையெழுத்திட்டுள்ளனர்.

இரு நாடுகளும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துறையில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் எனவும், இந்தத் துறையில் உலகளாவிய சவால்களுக்குத் தீர்வுகளைக் கண்டறியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)


# அக்மீமனவில் துப்பாக்கிச்சூடு

காலி, அக்மீமன, வெவேகொடவத்த பகுதியில் நேற்று அதிகாலை துப்பாக்கிச்சூடுச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் வீடொன்றின்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ-இ)

# முட்டை விலையைக் கட்டுப்படுத்த புதிய நடைமுறை

**கொழும்பு, ஜூன் 24**



சமூக ஊடகங்கள் மூலம் தினமும் முட்டை விலை குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்காக பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இடைத்தரகர்கள் முட்டைகளை விற்பனை செய்வதன்மூலம் பெரும் இலாபத்தை ஈட்டுவதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

முட்டை விலை அதிகரிப்பதைத் தடுக்கும்வகையில், சமூக ஊடகங்கள்மூலம் தினமும் முட்டை விலை தொடர்பாக பொதுமக்களுக்குத் தெரிவிக்க பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (எ-இ)


# கூடுதல் விலையில் மருந்து விற்பனை

## பாதிக்கப்பட்டோர் வாக்குமூலமளிக்கலாம்

**கொழும்பு, ஜூன் 24**

அரச மருத்துவமனை மருந்துகளைத் தனது மருந்தகத்தில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டின்கீழ் ஜெயவர்த்தனபுர மருத்துவமனையின் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் மகேஷி சுரசிங்க விஜயரத்ன கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரால் பாதிப்புக்குள்ளானவர்களால் வாக்குமூலம் அளிக்கமுடியும் என்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை இது தொடர்பாக 77 பேர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் வாக்குமூலமளித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)



# புதினம் தெரியுமோ ?

## மாடா உழைச்சு ஓடாத்தேய்ஞ்சும்.....!

மாடா உழைச்சு ஓடாத்தேயுறது எண்டு முந்தின காலத்து ஆக்கள் சொல்லக் கேள்விப்பட்டிருப்பியள். அப்பிடி ஓட்டுத் தொழிற்சாலையில மாடா உழைச்ச 75 பேருக்குக் கிடைக்கவேண்டிய சம்பளம் கிட்டத்தட்ட 35 வருசமாக் குடுபடேலை எண்டதை அறிஞ்சிருக்க மாட்டியள். அப்பிடி 35 வருசமா சம்பளமோ இல்லாட்டி நட்டஈடோ கிடைக்காமல் அந்தரிக்கிறவை இன்னமும் உயிரோடதான் இருக்கினம். அவையள் வேலை செய்த இடம் ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை.

எப்பிடிக் காங்கேசனில இருந்த சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தனில இருந்த இரசாயனத் தொழிற்சாலையள் இலங்கை முழுக்க பேமஸோ, அப்பிடி இந்த ஓட்டுத் தொழிற்சாலையும் பேமஸ். இந்தத் தொழிற்சாலையையும் அரசாங்கம் , மட்பாண்டக் கூட்டுத்தாபனத்துக்குக் கீழ கொண்டுவந்து பராமரிச்சது. வெளிமாவட்டங்களிலகூட ஒட்டுசுட்டான் ஓட்டுக்குத் தனிமதிப்பு. அதால இருபத்து நாலு மணித்தியாலும் இந்த ஓட்டுத்தொழிற்சாலையில வேலை நடந்துகொண்டிருக்கும். ஆனால் கண்ணூறுபட்டமாதிரி, சண்டை தொடங்கின பிறகு 1990களில காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையள்மாதிரி இந்த ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலைக்கும் மூடுவிழாச் செய்துபோட்டினம். ஓட்டுத் தொழிற்சாலையை மூடேக்க 75 பேர் அங்க நிரந்தரப் பணியாளர்களா இருந்தவை. அவையில சண்டையாலையும், வருத்தம் வந்தும் 22 பேர் இப்ப உயிரோட இல்லை. மிச்சமுள்ளவைக்கும் இன்னும் சம்பளமோ, நட்டஈடோ குடுக்காமல் எல்லா அரசாங்கங்களும் தங்களைப் பேய்க்காட்டிக்கொண்டு இருக்கினம் எண்டு அந்தத் தொழிலாளர்கள் கண்கலங்கச் சொல்லுகினம்.

இதைமாதிரி அரசாங்கம் வடக்கில நடத்திக்கொண்டுவந்த சிமெந்துத் தொழிற்சாலையிலையும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையிலையும் வேலைசெய்தவைக்கு, அந்தத் தொழிற்சாலையள் மூடின பிறகும் சம்பளம் குடுத்தவை. பிறகு ஒருகட்டத்தில எல்லாருக்கும் நட்டஈடு குடுத்து அதோட அவையின்ர வேலையை முடிவுக்குக் கொண்டந்திட்டினம். ஆனால் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை இழுத்துமூடின அரசாங்கம், அதுக்குப் பிறகு அங்க வேலை செய்தவையள் எப்பிடி இருக்கினம் எண்டு ஒருத்தரும் எட்டியும் பாக்கேலை. சம்பளமும் இல்லாமல், நட்டஈடும் இல்லாமல் எப்ப ஓட்டுத்தொழிற்சாலை திரும்பத் திறக்குமெண்டும் தெரியாமல் ஏங்கிக்கொண்டிருந்த அந்த எழுபத்தைஞ்சு பேரும் இண்டுவரைக்கும் ஏமாத்துப்பட்டுக்கொண்டுதான் இருக்கினம். போன மார்ச் மாதம் மூண்டாம் திகதி இதே ஓட்டுத்தொழிற்சாலையை இப்ப இருக்கிற அரசாங்கத்தின்ர அமைச்சர் பெருமெடுப்பில வந்து திறந்துவைச்சவர். அப்பிடித் திறக்கேக்கையாவது முந்தி வேலைசெய்த ஆக்களுக்குக் குடுக்கவேண்டிய சம்பளத்தையோ, நட்டஈட்டையோ குடுத்து பிராயச்சித்தம் செய்வம் எண்டு அந்த அமைச்சருக்கோ, மட்பாண்டக் கூட்டுத்தாபனக்காரருக்கோ ஒரு நினைப்புக்கூட வரேலையோ? இந்த ஓட்டுத்தொழிற்சாலைக்காக உழைச்சு ஓய்ஞ்சுபோன அந்த ஜீவன்களுக்கு இனியாவது சம்பளத்தையோ இல்லாட்டி நட்டஈட்டையோ குடுக்க உரியவை நடவடிக்கை எடுப்பினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள்மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் ஆலோசனைகேட்டு வருவார்கள். பிற்பகலுக்குமேல் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலுவலகப்பணிகளை உற்சாகமாக முடித்து அதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும். சிலருக்கு திடீர்ப்பயணத்தின் காரணமாக உடல் அசதி ஏற்படக்கூடும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழும்வாய்ப்புஏற்படும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை சற்று அதிகரித்தாலும் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வது ஆறுதலாக இருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்களை வெற்றிகரமாக நிறைவேற்றமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

# வன்பந்து சுற்றுப்போட்டி சம்பியனானது சென்றலைட்ஸ்




யாழ்ப்பாணம், ஜூன் 24

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தபட்ட "ரி-20" வன்பந்து சுற்றுப்போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

26 அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட தொடரில் யூனியன் விளையாட்டுக் கழகமும், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் இறுதிப்போட்டியில் மோதின. முதலில் துடுப்பாடிய யூனியன் விளையாட்டுக் கழகம் 18.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 18.1 பந்துப்பரிமாற்றங்களில் 122 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் ச.ஜெயந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக விக்ரோறியாக் கல்லூரி முன்னாள் அதிபர் வ.சிறீகாந்தனும், சிறப்பு விருந்தினர்களாக விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திருமதி சுலபாமதி, யாழ்.மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்க் இணைப்பாளர் சிவச்செல்வன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக விக்ரோறியன்ஸ் தவராஜா, உமாபதி, கிருபானந்த மனுநீதி, சிறீதரன், ரவிசங்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-25,125)

# இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். நீரிழிவுக் கழகமும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனையும் இணைந்து நடத்தும் இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரை திருநெல்வேலி சந்தை வளாகத்தில் இடம் பெறவுள்ளது. இந்த முகாமில் நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம், உடற்திணிவுச்சுட்டி போன்ற பரிசோதனைகளும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படும் என்றும், அனைவரும் அதில் கலந்து கொண்டு பயனடையுமாறும் யாழ். நீரிழிவுக் கழகம் தெரிவித்துள்ளது. (எ-41)




# விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், ஜூன் 24

"சத்துள்ள உணவு சிறுவர்களுக்கான உரிமை" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நடைபவனி கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகரில் நடத்தப்பட்டது.

சாவகச்சேரி நகரசபைக்கு முன்பாக ஆரம்பித்து சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்குச் சென்றடைந்தது. பின்னர் அங்கு வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவர்களால் விழிப்புணர்வு வீதி நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. மீண்டும் அங்கிருந்து ஆரம்பமான நடைபவனி சாவகச்சேரி கலாசார மண்டபத்தைச் சென்றடைந்தது. வேர்ள்ட் விஷன் லங்கா நிறுவனம் சாவகச்சேரிப் பிரதேசபையுடன் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. விழிப்புணர்வு சித்திரப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைகளில் அரச கொள்கை நியமங்களை உறுதியாகச் செயற்படுத்த வேண்டி மாணவர்களால் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பக் கோரிக்கையும் அதிகாரிகளிடம்ஒப்படைக்கப் பட்டது. (எ-25,27)

# முழுநேரக்கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 24

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2025ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுக்கான முழுநேரக் கற்கைநெறிகள் எதிர் வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இந்தக் கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், முச்சக்கரவண்டி பொறிவலர், அலுமினியம் பொருத்துநர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், விரைவுசேவை உணவு வழங்குநர், குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துநர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டர்), கட்டட நிர்மாண உதவியாளர் போன்ற கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4 சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம். இல 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ளமுடியும். மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 0212227949, 0710318737, 0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



**நாளொரு நல்வார்த்தை**

அறிவுரை சொல்பவனைவிட
அதை ஏற்றுச் செயற்படுத்துபவன்
சில சமயங்களில் உயர்ந்துவிடுகிறான்.

– கார்ல் வின்சென் –

# எல்லா வலிகளையும் சொல்லிடுவோம்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். நாளைமறுதினம் வரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர், நாளைய தினம் யாழ்ப்பாணத்துக்கும் வரவிருக்கின்றார். வோல்கர் ட்ரக்கின் இலங்கைக்கான பயணம் - குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கான பயணம், ஈழத் தமிழர்களுக்கு கிடைத்திருக்கும் வரலாற்று வாய்ப்பாகவே அமைந்திருக்கின்றது. மீண்டுமொரு தடவை இவ்வாறான அரிய வாய்ப்பு ஈழத் தமிழர்களுக்கும், தமிழ்த் தலைமைகளுக்கும் இன்னும் எத்தனை ஆண்டுகளின் பின்னர் கிடைக்குமோ தெரியாது. சிலவேளைகளில் கிடைக்காமலும் போகலாம். எனவே, இந்தச் சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்தவேண்டிய கட்டாய நிலையில் தமிழர் தாயகம் இருக்கின்றது.

இலங்கைக்கு இறுதியாக வருகைதந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளராக, முன்னைய ஆணையாளர் அல் ஹுசைன் பதிவானார். அவரின் பயணம் இடம்பெற்று 9 வருடங்களுக்குப் பின்னர் தற்போதைய ஆணையாளர் வோல்கர் ட்ரக் இலங்கைக்கு வந்துள்ளார். இந்த இடைப்பட்ட நீண்டகாலத்தில், போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் விவகாரம், காணாமற்போனோர் விடயம், அரசியற்தீர்வு என எதிலும் காத்திரமான முன்னேற்றத்தை ஸ்ரீலங்கா அரசாங்கம் காண்பிக்கவேயில்லை. இன்னும் சொல்லப்போனால், இருந்ததையும் இழந்த கதைதான் மிச்சமாகியிருக்கின்றது. இதற்கு, 'ஒன்றுபட்டு ஒரே குடையின்கீழ்' தமது கருத்துகளையும், நிலைப்பாடுகளையும் முன்வைக்காத தமிழ்த் தலைமைகளும் பாத்திரவாளிகளே.

எனவே, வோல்கர் ட்ரக்கின் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தின்போது, வலுவான செய்தியொன்றை ஓரணியில் - ஒன்றுபட்டு வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு தமிழ்த் தலைவர்களுக்கு உள்ளது. பௌத்தமயமாக்கல், காணி விடுவிப்பு, அரசியற்கைதிகளின் விடுதலை, அடாத்தாக மாற்றப்படும் இனப்பல்வகைமை, வலிந்து பறிக்கப்படும் வழிபாட்டுத்தலங்கள் என அனைத்து விடயங்களிலும் 'கண்கண்ட சாட்சியாக' மனித உரிமைகள் ஆணையாளரான வோல்கர் ட்ரக்கை மாற்றுவதில் வெற்றிபெற்றால் மட்டுமே, அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஏதோவொரு நம்பிக்கையில் தமிழ்த் தலைமைகள் முன்னெடுக்க முடியும். இத்தகைய வரலாற்று முக்கியத்துவமான தருணத்தில் செம்மணிப் புதைகுழியில் 'அணையா விளக்குப் போராட்டம்' மேற்கொள்ளப்படுவது வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால், ஆணையாளரின் கவனக்குவிவையும் பார்வையையும் அந்தக் குறுகிய வட்டத்துக்குள் மட்டும் மட்டுப்படுத்திவிடக்கூடாது. செம்மணி மனிதப் புதைகுழியும் எம்மினத்தின் பேரவலங்களில் ஒன்றே. அதேபோன்று முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை முதல் தமிழ் மக்களின் காணிகளைப் படையினர் கையகப்படுத்திவைத்திருப்பது வரையான எல்லா விடயங்களையும் மனித உரிமைகள் ஆணையாளருக்குக் காண்பிப்பது அவசியமானது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் களப்பயணத்தின்போது சரியான சகல விடயங்களையும் துல்லியமான வகையில் ஊடுகடத்தி அவரின் எதிர்வரும் அறிக்கையிடலில் கனதியான இடத்தைப் பிடிப்பதென்பது, இங்கிருந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆயிரம் அறிக்கைகளை அனுப்பிவைப்பதற்கு ஒப்பானது. அதைத் தமிழர் தாயகம் மனதிலிருத்துவது மிகவும் அவசியம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஆதரவு



கொழும்பு, ஜூன் 24

புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாகப் பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலே ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனர். ஆசிரிய பயிற்சிகள், கட்டுமானம், டிஜிற்றல் தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்கும், பொதுக்கல்வி, தொழிற்கல்வி, உயர்கல்வி மற்றும் சிறுவர் மேம்பாடு போன்ற திட்டங்களுக்கும் உதவி வழங்கத் தயார் என்று ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (எ-6)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பில் புதிய நடைமுறை

கொழும்பு, ஜூன் 24

எதிர்வரும் முதலாம் திகதி முதல் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்வோர் வேலைவாய்ப்புக்குச் செல்லும் நிறுவனத்திடம் இருந்து கடிதத்தைப் பெற்று அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக சமர்ப்பிக்கவேண்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

சிங்கப்பூர், ஜோர்தான், சவூதி அரேபியா, தென்கொரியா, ஓமான், இஸ்ரேல், ஐக்கிய அரபு அமீரகம், லெபனான், மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்வோருக்கே இந்த நடைமுறை செயற்படுத்தப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புக்காகச் செல்வோரின் நலன்கருதி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (எ-6)



## பெறுமதி இழக்கும் மின்சாரக் கார்கள்

கொழும்பு, ஜூன் 24

மின்சாரக் கார்கள் பதிவுசெய்யப்பட்ட பின்னர் பெறுமதி இழக்கின்றன என்று இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் சம்பத் மெரின்சிகே தெரிவித்துள்ளார். புதிய மின்சார வாகனங்கள் மீள் விற்பனை செய்யப்படும்போது அதன் பெறுமதி தொடர்பாக வாங்குபவர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-6)

## 18 நாள்களில் 74,570 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜூன் 24

இந்த மாதத்தின் முதல் 18 நாள்களில் 74 ஆயிரத்து 570 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதேவேளை, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து கடந்த 18ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் 11 இலட்சத்து 4 ஆயிரத்து 373 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## சட்டவிரோதச் சொத்துகள் 26 பேருக்கு எதிராக விசாரணை

கொழும்பு, ஜூன் 24

சட்டவிரோதமாகச் சேர்க்கப்பட்ட சொத்துகள் தொடர்பாக முன்னாள் சபாநாயகர், முன்னாள் இராணுவத்தளபதி, முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 26 பேருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் உதவியாளரிடமும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், சட்டவிரோதமாகச் சேர்க்கப்பட்ட சொத்துகள் முடக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-6)

நாளை
புதன்கிழமை - ஆனி 11
25.06.2025
சுபநேரம் : 10.25- 11.55
ராகுகாலம் : 02.55-04.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கொள்ளைகளைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்கவும்!

*பாதுகாப்புத் தரப்பினருக்கு கடற்றொழில் அமைச்சர் அறிவுறுத்து*

**கொழும்பு, ஜூன் 24**

**கிழக்கு மாகாண கடற்பரப்புக்குள் இடம்பெறும் கடற்கொள்ளைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றின்போதே அமைச்சர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார். கிழக்குக் கடற்பகுதியில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் கடற்கொள்ளைச் சம்பவங்களால் அம்பாறை, மட்டக்களப்பு மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பிலும், அதனைத் தடுப்பதற்குரிய வழிமுறைகள் பற்றியும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன. நிலைமையை விரிவாக மதிப்பாய்வு செய்தல், மீன்பிடி சமூகங்களைப் பாதுகாத்தல் மற்றும் கடல்சார் பாதுகாப்பு அமுலாக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைந்த தீர்வுகளை உருவாக்குதல் ஆகியவற்றின்மூலம் இந்தப் பிரச்சினையை உடனடியாக நிவர்த்திசெய்வதன் முக்கியத்துவத்தை பங்கேற்பாளர்கள் இதன்போது வலியுறுத்தினர். (ச-26)



## யாழ்ப்பாணம்–வவுனியா முதல்வர்கள் சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா மற்றும் வவுனியா மாநகரசபை முதல்வர் சுந்தரலிங்கம் காண்டீபன் ஆகியோருக்கிடையிலான சம்பிரதாயபூர்வ சந்திப்பு கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது மாநகரசபையின் செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள், நடைமுறைகள் மற்றும் சபை நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

சந்திப்பில் யாழ்ப்பாணம் மாநகர பிரதி முதல்வர் இ.தயாளன், மாநகரசபை உறுப்பினர்கள், வவுனியா மாநகரசபைச் செயலாளர் மற்றும் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் ஜோன் ஜிப்பிரிக்கோ எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22)

## கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை திறப்பு

கதிர்காம முருகன் ஆலயத்தின் கொடியேற்ற விழாவை முன்னிட்டு, பக்தர்களுக்காக உகந்தை வனப் பாதை கடந்த 20ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, அம்பாறை மாவட்டச் செயலர் சிந்திக்க அபேவிக்ரம உள்ளிட்டோர் பங்கேற்று பாதையைத் திறந்துவைத்தனர். கதிர்காமத் திருவிழா ஜூலை 26 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, ஜூலை 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. (ச-இ)

## பழங்களும் மரக்கறிகளும் ஆரோக்கியத்துக்கு நன்று!

*மன்னாரில் விழிப்புணர்வு*

மன்னார், ஜூன் 24

தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் போசாக்கான உணவுகளை உண்ணும் பழக்கத்தை வலுப்படுத்தும் விழிப்புணர்வு நிகழ்வு மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. மன்னார் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை, மற்றும் மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

'பழங்களும் மரக்கறிகளும் எப்போதும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற நிகழ்வில் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். இதன்போது சுகாதார உத்தியோகஸ்தர்களினால் தயாரிக்கப்பட்ட உடலுக்கு தீங்கு ஏற்படுத்தாத அன்றாட உணவுப்பழக்கங்களில் நாம் பின்பற்றவேண்டிய நடைமுறை தொடர்பான மேடை நாடகமும் மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டது. (ச-56)








முல்லைத்தீவில்

## மாடு இறைச்சியாக்கல்; கும்பலொன்று கைது!

முல்லைத்தீவு, ஜூன் 24

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார் கட்டு, மூங்கிலாறு உள்ளிட்ட பிரதேசங்களில் தொடர்ச்சியாக மக்களின் வாழ்வாதாரமான கால்நடைகளைக் கடத்தி இறைச்சியாக்கி விற்பனைசெய்யும் கும்பலொன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கும்பல் கடந்த புதன்கிழமை இரவு வாகனம் ஒன்றில் மாடுகளைத் திருடி ஏற்றியவேளை மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

பொலிஸ் பரிசோதகர் வி.ரத்தினாயக்கா தலைமையிலான பொலிஸ் குழுவினரால் விரைந்து இந்தக்குற்றச் செயல் முறியடிக்கப்பட்டது.

இதன்போது இருட்டுமடுக் கிராமத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்களும், மூங்கிலாற்றுப் பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களைச் சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த புதுக்குடியிருப்புப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19)



## சர்வதேச ரோல் பந்து அணியில் இடம்பிடித்த கிளி.மத்திய கல்லூரி

கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் நடைபெறவுள்ள சர்வதேச ரோல் பந்துப்போட்டிக்கான அணியில் இலங்கை அணியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் நான்கு பேர் இடம்பிடித்துள்ளனர். இவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை கல்லூரியின் முதல்வர் சவரி பூலோக ராஜா தலைமையில் நடைபெற்றது. இந்தப் போட்டி கடந்த சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-41-113)

## சரிவடையும் தேங்காய் விலை

யாழ்ப்பாணம், ஜூன் 24



யாழ்.குடாநாட்டில் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் 200 ரூபாவுக்கும் மேல் விற்கப்பட்ட தேங்காயொன்று தற்போது 170 ரூபாவாக சரிவடைந்துள்ளது.

அதேவேளை அண்மையில் பெய்த மழை காரணமாக தென்னைகளில் பரவிவந்த வெள்ளை ஈக்களின் தாக்கமும் தற்போது கட்டுக்குள் வந்துள்ளது.

வெள்ளை ஈ தாக்கத்தாலேயே தேங்காய் விலை உச்சந்தொட்டது என்றும் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ச-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈரானுக்கு ரஷ்யா ஆதரவு



இஸ்ரேலின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கும், இஸ்ரேலின் தாக்குதல்களை முறியடிக்கும் வகையிலும் ஈரானுக்கு ரஷ்யா முழுமையான உதவிகளை வழங்கும் என்று ரஷ்ய அதிபர் புடின் அறிவித்துள்ளார். (ம)


## மணப்பெண் தேவை

1. தெல்லிப்பளை, குருகுலம், 1996, சித்திரை, Masters OF Business Management, Batchelor Of Accounting Commercial law. New Zealand Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (36133)
2. பருத்தித்துறை, குருகுலம், 1990, உத்திரட்டாதி, MSC, Australia Citizen மாப்பிள்ளைக்கு பென் தேவை. (30699)
3. மானிப்பாய், குருகுலம், 1981, சதயம், Bechelor Degree, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (24247)
4. முல்லைத்தீவு, குருகுலம், 1993, பூராடம், Mechanical Engineering. Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (49465)
5. பருத்தித்துறை, குருகுலம், 1991, மிருகசீரிடம், B com (Hons). மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (39598)
6. அளவெட்டி, இந்து, கௌரவகுலம், (V), 1989, உத்திராடம், MSC in. Electrical Engineering at Hertfordshire university, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53552)
7. திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம், (V), 1989, அத்தம், Bsc (hons), UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை, (24452)
8. புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம், (V), பரணி, 1995, Bsc Biomeaical Science, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (49598)
9. காரைநகர். இந்து கௌரவகுலம், (V), சித்திரை, 1980 Bachelor OF Software Engineering, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
10. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம், (V), 1982, அத்தம். Masters, Canada + USA Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (24-750)

தொடர்புகளுக்கு: J.P.Sarma Whatsapp and Phone
www.thaalee.com **077 539 3728**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் நல்லூர். பகுதியில் சிறிய குடும்பத்திற்கு சிறுவர் பராமரிப்பு. வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.

**076 578 9372**

## காணி விற்பனைக்கு

சுதுமலை குரங்கிலிப்பான் எனும் இடத்தில் 4 பரப்பு, 5.25 குளியில் அமைந்த காணி விற்பனைக்குண்டு.

(CS/58657) D*

**074 251 7329**

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 8 பருத்தித்துறை வீதி 4ம் ஒழுங்கை, ஆதன இலக்கம் 26/5 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி தம்பையா வல்லிபுரநாதன் பெண் சின்னம்மா தம்பையா தம்பிராஜா ஆகியோர் 10.02.1958ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சூசைப்பிள்ளை தனபாலசிங்கம் முகதாவில் 2351ம் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி இராசையா கதிரவேற்பிள்ளை பெண் இராசமலரிற்கு சீதனமாக கையளித்துள்ளார்.

பின்னர் குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு செம்பியன் ஒழுங்கையைச் சேர்ந்த இராசையா கதிரவேற்பிள்ளை பெண் இராசமலர் அவர்கள் 21.11.1986ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அனுஷியா நடேசலிங்கம் முகதாவில் 218ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் இலகடி காரைநகர் திருவேங்கடம் சந்திரசோதி பெண் சித்திராவிற்கு சீதனமாக கையளித்துள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கு இறை **"ஆனைக்காரன் குறுவிலத்தோட்டம்"** நிலப்பரப்பு மூன்று இதில் மேற்கு பக்கமாக ஒன்றும் (1) குளி ஒன்பதும் (ஒன்றரைப்பரப்பு) அதனுள் அடங்கிய கல்வீடும் இதற்கு எல்லைகள்

வடக்கு : ஒன்பது அடி கை ஒழுங்கையும் கனகர் பெண் சாந்தமலரின் ஆதனம்
கிழக்கு : மிகுதி ஆதனம்
தெற்கு : பஞ்சாட்சரம் கேதாரகௌரியினதாதனம்
மேற்கு : குமாரசுவாமியினதும் பெண் கமலத்தினதும் ஆதனமும் சண்முகரத்தினம் பெண் வள்ளியம்மாவின் ஆதனமும் இதனுலடங்கலும். கிழக்கு பக்கமாக கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் வடக்கு பக்கமாக செல்லும் தண்ணீர் அள்ளும் உரித்தும்

தற்போது இவ்வாதனத்தைத் திருவேங்கடம் சந்திரசோதி பெண் சித்திரா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர் எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது திருவேங்கடம் சந்திரசோதி பெண் சித்திரா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR 45333) E




## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## 2025 – விசுவாவசு வருட மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே !

நிகழும் விசுவாவசு வருடம் ஆனி மாதம் 12ஆம் நாள் 26.06.2025 வியாழக்கிழமை அம்பாளின் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11.07.2025 வெள்ளிக்கிழமை இரவு தெப்போற்சவத்துடன் நிறைவுபெறும். இலங்கையில் கடல் சூழ்ந்த யாத்திரைத் தலமாகிய நயினாதீவில் அழகொழுக வீற்றிருந்து அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் உயர் திருவிழாக் காலத்தில் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகைதந்து அம்பாளின் திருவருட்கடாட்சத்தினைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

### நாளாந்த மஹோற்சவ விபரம்

| | | | |
|---|---|---|---|
| 26.06.2025 | வியாழக்கிழமை | 1 ஆம் திருவிழா | கொடியேற்றம் பகல் 12.00 மணி |
| 30.06.2025 | திங்கட்கிழமை | 5 ஆம் திருவிழா | பகல் குடைத் திருவிழா, இரவு முத்துச்சப்பறம் |
| 02.07.2025 | புதன்கிழமை | 7 ஆம் திருவிழா | இரவு கைலைக்காட்சி |
| 05.07.2025 | சனிக்கிழமை | 10 ஆம் திருவிழா | பகல் கைலை காட்சி, இரவு திருமஞ்சம் |
| 06.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | 11 ஆம் திருவிழா | பகல் விசேட கருட, சர்ப்ப பூசையுடன் வாயு பட்சணி நாகம் திருவீதி உலா இரவு பூந்தண்டிகை |
| 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | 13 ஆம் திருவிழா | பகல் சிவபூசைக் கைலைக்காட்சி , இரவு சப்புறம் |
| 09.07.2025 | புதன்கிழமை | 14 ஆம் திருவிழா | பகல் இரதோற்சவம், பிற்பகல் பச்சை சாத்துதல், இரவு அம்பாள் தேரடி தரிசனம் |
| 10.07.2025 | வியாழக்கிழமை | 15 ஆம் திருவிழா | பகல் கங்காதரணியில் தீர்த்தோற்சவம், இரவு திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 11.07.2025 | வெள்ளிக்கிழமை | 16 ஆம் திருவிழா | தெப்போற்சவம் (பூங்காவனம்) |

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.

அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக.

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 11 - 1953



மறைவு
23 - 06 - 2025

### செல்வேந்திரன் நகுலாம்பிகை

வேலணை 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வேந்திரன் நகுலாம்பிகை அவர்கள் நேற்று (23.06.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இலட்சுமி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியின் அன்பு மருமகளும், செல்வேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், யாழினி (ஆசிரியர் - யா/செட்டிபுலம் அ.த.க பாடசாலை - வேலணை), காந்தரூபன் (கனடா), நளினி (தையல் போதனாசிரியர் பிரதேச செயலகம் - வேலணை) அன்பரசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானகுமார், கார்த்திகா (கனடா), கஜேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சண்முகநாதன், கிருஷ்ணநாதன், கனகாம்பிகை, கேதாரகௌரி, பத்மநாதன், நடேசநாதன், ரதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மலிங்கத்தின் உடன்பிறவாச் சகோதரியும் செல்வனேஸ்வரி, புஸ்பராணி, விக்னேஸ்வரி, இரத்தினசிங்கம் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் சித்திரா, சுவேந்தினி, கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், ரக்ர்சன், பிரகீர்சனி, மிதுசன், சிரோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிஷாந்தன், நிதர்சினி, யதுஷா, சுரேகா, டிஷாந், விதுஷன், சிவப்பிரியா, பாணுப்பிரியா ஆகியோரின் பெரியதாயாரும் உமாதேவி, ரவீந்திரன், நிலானி, சிந்துயா, அஜந்தன், நதுஷா, நதுஷன், சதுஷன், சனுசியா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்,
சி.செல்வேந்திரன் (கணவர்)
077 691 7157 , 077 507 5431

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 08 . 1949



மறைவு
21 . 06 . 2025

### இராசதுரை செல்வரத்தினம்

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை செல்வரத்தினம் அவர்கள் 21.06.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் இராசதுரை - இரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மகனும், நவரத்தினம் - பூமலர் தம்பதியினரின் மூத்த மருமகனும், பரமேஸ்வரி, சகுந்தலாதேவி, லீலா, கந்தசாமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஜெயசிறி அவர்களின் பாசமிகு கணவரும் ஜெயரூபி, ஜெயமீரா, ஜெயசாளினி, செல்வகணேஸ், தனுட்செல்வி, தினேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசந்திரன், கௌரிசங்கர், விமலராஜன், சதீஸ்குமார் ஆகியோரின் மாமனாரும் அபிசாந், சியானுகன், காதம்பரி, அஸ்வின், அக்ஷரா, அர்வின், கிர்ஷ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 25.06.2025 புதன்கிழமை முற்பகல் 11:00 மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சீயக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 052 1401

நீர்வேலி வடக்கு
நீர்வேலி

(CS 58663) E

## நீங்காத நினைவலைகளில் 16 ஆண்டுகள்

### அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

(Retired MSO Jaffna Post Office)

திதி : சதுர்த்தசி 24.06.2025 செவ்வாய்க்கிழமை



**அப்பா உங்கள்**
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக இன்று (24.06.2025) செவ்வாய்க்கிழமை கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் பர்வதவர்த்தினி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமிக்கு மோட்ச அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று சுன்னாகம் வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக முதியோர் இல்லம், புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு விசேட மதிய உணவும் வழங்கப்படும்.

மலர்வு
18.07.1930

உதிர்வு
22.06.2009

தகவல்: குடும்பத்தினர் சார்பாக
மகன் - நாகராஜா விஜயகுமார் (சங்கர்) - சுவிஸ்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர்களின் மூலம் பிரச்சினை தீராது!

போப்பாண்டவர் லியோ தெரிவிப்பு



வத்திக்கான், ஜூன் 24

போர்மூலம் எந்தப் பிரச்சினையையும் தீர்க்கமுடியாது என்று போப்பாண்டவர் லியோ தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் இருந்து, பிரதானமாக ஈரானிலிருந்து தொடர்ந்து கவலையளிக்கும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. முன் எப்போதையும்விட, மனிதகுலம் அமைதிக்காகக் குரல்கொடுத்துக்கொண்டிருக்கிறது. இது பொறுப்புணர்வும் பகுத்தறிவும் தேவைப்படும் ஒரு கூக்குரல். இது ஆயுதங்களின் இரைச்சல் அல்லது மோதலைத் தூண்டும் சொற்பொழிவுகளால் மூழ்கடிக்கப்படக்கூடாது.

சர்வதேச சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் போரின் துயரத்தைத் தடுக்கும் தார்மிகப் பொறுப்பைக் கொண்டுள்ளனர். மனித கண்ணியம் ஆபத்தில் இருக்கும்போது அதைவிடப் பெரிய பிரச்சினை எதுவும் இருக்கமுடியாது.

போர்மூலம் எந்தப் பிரச்சினையையும் தீர்க்கமுடியாது. மாறாக, அது அவற்றைப் பெரிதாக்கி மக்களின் வரலாற்றில் ஆழமான காயங்களை ஏற்படுத்துகிறது. எந்த இராணுவ வெற்றியும் ஒரு தாயின் வலியையோ, ஒரு குழந்தையின் பயத்தையோ அல்லது திருடப்பட்ட எதிர்காலத்தையோ ஒருபோதும் ஈடுசெய்யமுடியாது. வன்முறை மற்றும் இரத்த மோதல்கள்மூலம் அல்லாமல், அமைதிமூலம் நாடுகள் தங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கட்டும் என்று போப்பாண்டவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

கட்டாரில் உள்ள

# அமெரிக்கத் தளங்களின் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்

தெஹ்ரோன், ஜூன் 24

கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை இலக்குவைத்து ஈரான் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



ஈரானிய அணுசக்தித் தளங்கள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே, கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை நோக்கி ஆறு ஏவுகணைகளை வீசி ஈரான் பதில் தாக்குதல் நடத்தியுள்ளது. ஈரானின் தாக்குதலை கட்டாரும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆறு ஏவுகணைகள் கட்டார் வான்பரப்பினுள் பிரவேசித்தன. எனினும், அவை அமெரிக்கத் தளங்களை அடைவதற்கு முன்பாக இடைமறித்து அழிக்கப்பட்டன என்றும் கட்டார் அரசாங்கம் அறிவித்துள்ளது. அமெரிக்கத் தளத்துக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் வெளிவரவில்லை. ஈரானும் சேத விடயங்கள் தொடர்பில் தகவல்களை வெளியிடவில்லை.

ஈரானின் தாக்குதலைத் தொடர்ந்து கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரைன் உள்ளிட்ட நாடுகள் தங்களின் வான்பரப்பை முழுவதுமாக மூடியுள்ளன. இந்தத் தாக்குதல் முயற்சிக்கு அமெரிக்காவும் பதிலடி கொடுக்க வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. (ம)

அமெ. தாக்குதலுக்கு முன்பே

# யுரேனியத்தை அகற்றிய ஈரான்



வொஷிங்டன், ஜூன் 24

அமெரிக்காவின் தாக்குதலுக்கு முன்னர் ஈரான் தனது போர்டோ அணு உலையிலிருந்து மிகவும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அகற்றிவிட்டது என ஈரானிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் இரகசிய இடமொன்றுக்கு மாற்றிவிட்டது.

போர்டோ அணு உலையில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை எடுக்கப்பட்ட செய்மதிப் படங்கள் போர்டோ அணு உலைக்கு அருகில் நீண்டவரிசையில் ட்ரக் வாகனங்கள் காணப்படுவதைக் காண்பித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# அமெரிக்கத் தாக்குதல்களுக்கு நிச்சயம் பதிலடி வழங்கப்படும்!

தெஹ்ரோன், ஜூன் 24

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் நிலைமைகளை மேலும் மோசமாக்கும். எனவே, பதிலடியை எதிர்கொள்வதற்கு அனைவரும் தயாராக இருக்கவேண்டும் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அணுவுலைகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து, இஸ்ரேலின் டெல் அவிவ் நகர்மீது ஈரான் மிகக்கடுமையான தாக்குதல்களை நடத்திவருகின்றது என்பதை சர்வதேச ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. டெல் அவிவ் நகரம் வெறிச்சோடிப்போய் காணப்படுகின்றது. மக்கள் பதுங்கு குழிகளுக்குச் சென்றுள்ளார்கள் என்றும் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இஸ்ரேலின் ஏவுகணைத் தடுப்பு அமைப்பான அயன்டோம் முழுவீச்சில் செயற்பட்டாலும் ஈரானிய ஏவுகணைகளை முழுமையாகத் தடுத்து நிறுத்தமுடியவில்லை. 45 வீதமான ஏவுகணைகள் இலக்குகளைத் தாக்குகின்றன. 55 வீதமான ஏவுகணைகளை மட்டுமே அயன்டோம் தடுத்துநிறுத்துகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வழக்கமாக நடத்தும் ஏவுகணைத் தாக்குதலுக்கு மேலாக, மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஈரான் தயாராகிவருகின்றது என்று ஈரானிய வெளிவிவகார அமைச்சும் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



ஐ.நா. கடும் கண்டனம்

# போர்ப்பதற்றத்தை வலிந்து ஏற்படுத்துகிறது அமெ.

வொஷிங்டன், ஜூன் 24

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல், போர்ப்பதற்றமொன்றை வலிந்து ஏற்படுத்தும் பொறுப்பற்ற நடவடிக்கை என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் குட்டெரெஸ் கண்டித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய கிழக்குப் பிராந்தியம் ஏற்கனவே போரின் விளிம்பில் உள்ளது. இவ்வாறான நிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தனது இராணுவப் பலத்தைப் பயன்படுத்தியிருப்பது மிகவும் கண்டனத்துக்குரிய விடயமாகும். அத்துடன், இது போர்ப்பதற்றத்தை வலிந்து ஏற்படுத்தும் பொறுப்பற்ற நடவடிக்கையாகவும் காணப்படுகின்றது. இந்த மோதல் விரைவில் கட்டுப்பாட்டை இழக்கும் அபாயம் அதிகரித்துவருகிறது. இது பொதுமக்கள், மத்திய கிழக்குப் பிராந்தியம் மற்றும் உலகுக்கு பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தும். ஐ.நா. சபையின் சாசனம் மற்றும் சர்வதேச சட்டவிதிகளின்கீழ், ஐ.நா. உறுப்புநாடுகள் தங்கள் கடமைகளை நிலைநிறுத்தவும், போர்ப்பதற்றத்தைத் தணிக்கவும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இராணுவ நடவடிக்கை எதற்கும் தீர்வு இல்லை. பேச்சுவார்த்தை மட்டுமே முன்னோக்கிச்செல்வதற்கான ஒரேவழி. அமைதி மட்டுமே ஒரே நம்பிக்கை - என்றார். (ம-இ)

குழந்தைகளுக்கு எதிரான

# வன்முறைகளில் காஸா முதலிடம்

காஸா, ஜூன் 24

குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் உலகமெங்கும் அதிகரித்துள்ளது என்றும், காஸா முதலிடத்தில் உள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது.

படிக்கவும், கற்றுக்கொள்ளவும், விளையாடவும் வேண்டிய குழந்தைகள் தற்போது தோட்டாக்களின் கீழ் எவ்வாறு உயிர்வாழ்வது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் இது துரதிஷ்டமான நிலையாகும்' என்றும் ஐக்கிய நாடுகள் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சை நடத்துவதா? இல்லையா?

## ஆராய்வதற்கு குழு

**கொழும்பு, ஜூன் 24**

**ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையை 2029 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடத்துவது குறித்து ஆராய ஒரு குழுவை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பரீட்சையை நடத்துவது மற்றும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குக் குறைந்த அழுத்தத்துடன் வினாத்தாள்களை உருவாக்குவது குறித்து பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை மற்றும் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் ஆய்வுகளைக் கருத்திற்கொண்டு 2029 ஆம் ஆண்டுக்குப் பிறகு பரீட்சையை நடத்துவது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும். ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை திடீரென நிறுத்தப்படாது. பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும், பிள்ளைகள் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

# ஐ.நா. சிறுவர் நிதியத்தினர் பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 24

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கையில் சமாதானத்தைப் பேணுதல், மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல், சுகாதாரம், நிர்வாகம் மற்றும் நிதியளித்தல், பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல், கல்வி, பொருளாதாரத்தை இயல்புநிலைப்படுத்தல், காலநிலை மாற்றம், விவசாயம் மற்றும் மீன்பிடித்தொழில் ஆகிய துறைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குழுவின் அறிக்கை தொடர்பாக அரசாங்கம் எடுக்கும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் ஆதரவை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ச-26)

**யாழ்ப்பாணம் மாநகரசபை**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

**கேள்வி அறிவித்தல் -2025**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் : **ரூபா 1,000.00 + Vat 18%**
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- **24.06.2025 தொடக்கம் 08.07.2025 வரை (ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)**
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- **09.07.2025 முற்பகல் 10.00 மணி வரை**
- கேள்விப்படிவம் திறத்தல் :- **09.07.2025 முற்பகல் 10.00 மணிக்கு**
- மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் :- **ஆரம்ப கேள்வித் தொகையின் 2% அல்லது ரூபா 2,000.00 இத் தொகைகளில் கூடிய தொகை**

❖ விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் **09.07.2024 முற்பகல் 10.00 மணிக்கு** முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

❖ கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் கடிதம் மூலம் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமூகமளித்தல் வேண்டும்.

❖ கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தாங்கள் சித்தி பெற்ற சகல கடைகளுக்குமான இடத்திற்குரிய கேள்வித் தொகையினையும் அதற்கான 18% Vat இனையும் **14.07.2025ம் திகதி 2.30** மணிக்கு முன்னர் முன்னரங்கப் பகுதியில் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குறிக்கப்பட்ட கடைகளிற்கான இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். தவறும் சந்தர்ப்பத்தில் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட சகல விண்ணப்பங்களும் இரத்துச்செய்யப்படுவதுடன் மீளளிக்ககூடிய வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

❖ **கேள்விகோரலில் சித்தியடைந்தோர் 14.07.2025ம் திகதி 2.30 மணிக்கு முன்னர் கேள்வித் தொகையினைச் செலுத்தத் தவறிய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.**

❖ மீளளிக்கக் கூடிய வைப்புப் பணத்தை மீளளிக்க ஏதுவாக வைப்புதாரரின் வங்கி கணக்கு புத்தக பிரதி ( பெயர், கணக்கிலக்கம், வங்கி விபரம் உள்ளடங்கிய பக்கம் இணைக்கப்படவேண்டும்.

❖ 30.11.2025ம் திகதிக்கு முன் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து மீள பெற்றுக்கொள்ளாத மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் சபை வருமானமாக மாற்றப்படும்.

❖ மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

❖ கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

# பிள்ளையான் கட்சி வெற்றிக்கு உதவிய தேசிய மக்கள் சக்தி

## சாணக்கியன் சாடல்



மட்டக்களப்பு, ஜூன் 24

வாகரைப் பிரதேசசபையில் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆட்சியமைக்க தேசிய மக்கள் சக்தி ஆதரவளித்துள்ளது. இது கொள்கை நிலை தவறியதை எடுத்துக் காட்டுகிறது என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தனது 'எக்ஸ்' சமூக வலைத்தளப் பக்கத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), கிழக்கு மாகாணத்தில் 2006 ஆம் ஆண்டு பல்கலைக்கழக உபவேந்தர் கடத்தல் மற்றும் காணாமற்போன சம்பவம் தொடர்பான வழக்கில் இன்னும் தடுப்புக்காவலில் உள்ளார்.

இந்தநிலையில் பிள்ளையானின் கட்சிக்கு வாகரை பிரதேசசபையில் தேசிய மக்கள் சக்தி ஆதரவளித்துள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு சீரான கொள்கைகள் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பிள்ளையானின் கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவளித்து வெற்றியடையச் செய்துள்ளனர் - என்றார். (ச-இ)

## பலத்த...

பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் தரவுகளுக்கு அமைய, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12 வீடுகளும், 2 அடிப்படைக் கட்டமைப்புகளும் சேதமடைந்துள்ளன. ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 9 வீடுகளும், ஓர் அடிப்படைக் கட்டமைப்பும் சேதமடைந்துள்ளன. வேலணை பிரதேசசெயலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகள் சேதமடைந்துள்ளன. காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3 வீடுகள் சேதமடைந்துள்ளன. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3 வீடுகள் சேதமடைந்துள்ளன. கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடொன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது. சங்கானை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடொன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது. நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகளும் சேதமடைந்துள்ளன. தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடொன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (அ-ம-27-26)

## 8 மாதக்...

உயிரிழந்துள்ளது. குழந்தைக்கு ஏற்கனவே இருதயம் தொடர்பான பிரச்சினைகள் இருந்துள்ளன. உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செம்மணியில்...

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்தில் உதயனின் செய்தியறிக்கைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கிருஷாந்தியின் கொலை, கிருஷாந்தியின் கொலை வழக்கு, செம்மணியில் அவதானிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள், செம்மணிப் புதைகுழிகள் தொடர்பில் இராணுவத்தினர் தெரிவித்த சாட்சியங்கள் உள்ளிட்ட விடயங்களில் வெளியான செய்தியறிக்கைகளே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (அ-ம-26)

## சுகாதாரக்...

தாரப் பரிசோதகர் நிர்மலானந்தனின் ஆலோசனைக்கு அமைய உணவகங்கள் மற்றும் பலசரக்குக் கடைகள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் திருநெல்வேலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான குழுவால் திருநெல்வேலியில் உணவகம் ஒன்றும், பலசரக்குக் கடையொன்றும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்குவது அவதானிக்கப்பட்டு, அவற்றைச் சீர்செய்யுமாறு அவகாசமும் உரிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

எனினும், சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாததைத் தொடர்ந்து பலசரக்குக்கடை உரிமையாளருக்கு எதிராகவும், உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராகவும் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தொடரப்பட்டது. நீதவான் செ.லெனின்குமார் தலைமையில் நேற்றையதினமே வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்போது, பலசரக்குக்கடை உரிமையாளருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. உணவக உரிமையாளருக்கு 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்வரை உணவகத்தை சீல் வைத்து மூடுமாறும் உத்தரவிடப்பட்டது. (அ-ம-26)

## இரு...

பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, பாரசீக ஜலசந்தியை முடக்கும் நடவடிக்கையில் ஈரான் ஈடுபட்டுள்ளது. இதனால், பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சத்தில் மக்கள் வரிசையில் நின்று நேற்றுப் பெற்றோலைக் கொள்வனவு செய்தனர். இதையடுத்தே, பெற்றோல் போதியளவு இருப்பில் உள்ளது என்று பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என்று அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை. போதுமான எரிபொருள் இருப்பு பேணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பகுதிகளில் எரிபொருள் வரிசைகள் இல்லாவிடினும், வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனேகமானவர்கள் வரிசைகளில் நின்று எரிபொருள் நிரப்புவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான தவறான முன்னுதாரணங்களை வழங்க வேண்டாம் என்று மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்று இரவு (நேற்று) எரிபொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் அடுத்தகட்ட விநியோகங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றனர். (அ-ம-17)

## வளைகுடாவில்...

பெறுவதற்காக மக்கள் நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் 20 வீதமானவை ஹார்முஸ் ஜலசந்தி (பாரசீக ஜலசந்தி) ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வழித்தடம் மூடப்பட்டால், உலகளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்படும். அத்துடன், விலையேற்றங்களும் பதிவாகும். இதையடுத்தே, தமது எரிபொருள் இருப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொதுமக்கள் நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்தனர். (அ-ம-100-26)

## இரண்டாவது...

டார்சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நபர், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

விநாயகபுரத்தைச் சேர்ந்த சின்னராசா பிரதீபன் (வயது-34) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பாதுகாப்புச்...

திட்டங்களை முன்வைப்பதற்காக தேசியப் பாதுகாப்புச் சபையைக் கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சஜித் மேலும் தெரிவித்ததாவது:-

பாரசீக வளைகுடாவை அரேபியக் கடலுடன் இணைக்கும் ஹார்முஸ் ஜலசந்தியை மூடும் முடிவை ஈரான் நாடாளுமன்றம் எடுத்துள்ளது. இதனால் கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, எல்.என்.ஜி. எரிவாயுத் துறைகளில் பெரும் பிரச்சினை எழக்கூடும். ஏனெனில் சர்வதேச எரிபொருள் விநியோகத்தில் 20 வீதமானவை ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே இடம்பெறுகின்றன. அந்த மார்க்கம் மூடப்பட்டால் உலகில் தளம்பல் நிலை ஏற்படும். எனவே, நிலைமையின் தீவிரத்தை இலங்கை சரியாகக் கணித்துச் செயற்படவேண்டும்.

ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும் பட்சத்தில், இலங்கையின் எரிசக்தித் துறையில் ஏற்படும் பாதிப்பை நிவர்த்தி செய்யமாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மத்திய கிழக்கில் பணியாற்றும் இலங்கையர்களின் பாதுகாப்புக் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள உலகளாவிய பதற்றம் இலங்கையின் பொருளாதாரத்தை கணிசமாகப் பாதிக்கும். எனவே, நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தளர்வான போக்கைப் பேணுமாறு கோர வேண்டும் - என்றார். (அ-ம-44)

## பச்சிலைப்பள்ளியில்...

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. தவிசாளர் தெரிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சுப்பிரமணியம் சுரேனின் பெயர் முன்மொழியப்பட்டது. வேறு எவருடைய பெயரும் தவிசாளர் தெரிவுக்கு முன்மொழியப்படாமையைத் தொடர்ந்து சுப்பிரமணியம் சுரேன் ஏகமனதாகத் தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். உபதவிசாளராக சிவகுரு செல்வராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

13 உறுப்பினர்களைக் கொண்ட பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 6 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் 3 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் 3 உறுப்பினர்களும், தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் ஓர் உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## முன்னணியின்...

தேசிய மக்கள் முன்னனியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தவிசாளர் தெரிவின்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் செ.மயூரனுக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அதற்கு மாறாக அவர் நடுநிலை வகித்தார். இதனாலேயே அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக, கட்சியின் தீர்மானத்துக்கு முரணாகச் செயற்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட உறுப்பினரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. (அ-ம-28-26)

## சாவகச்சேரி...

பொன்னையா குகதாசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பிரதேசசபையின் முதலாவது அமர்வு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

28 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி 8 ஆசனங்களையும், தமிழ்த் தேசியப் பேரவை 7 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி 5 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி ஓர் ஆசனத்தையும், ஈ.பி.டி.பி. ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

தவிசாளர் பதவிக்காக இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் பொன்னையா குகதாசனும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் செல்வரத்தினம் மயூரனும் முன்மொழியப்பட்டனர். வாக்கெடுப்பின்போது தேசிய மக்கள் சக்தியினரும், தமிழ்த் தேசியப் பேரவையின் (அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்) உறுப்பினர் ஒருவரும் நடுநிலை வகிப்பதாக அறிவித்தனர். இதனால், தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்ட இருவரும் 10:10 என்று சமமான வாக்குகளைப் பெற்றனர்.

இதனால், திருவுளச் சீட்டின் மூலம் தவிசாளரைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. திருவுளச் சீட்டில் தமிழரசுக் கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைத்தது. (அ-ம-26-28)

## அணையா...

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் நேற்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே, செம்மணி வளைவுப் பகுதியில் இந்தப் போராட்டம் நேற்று ஆரம்பித்துள்ளது.

சட்டத்தரணி வைஸ்ணவி சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தின் ஆரம்ப நிகழ்வில், ஒரு நிமிட அகவணக்கத்தைத் தொடர்ந்து, செம்மணியில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவி கிருசாந்தியின் உறவினர் கலந்துகொண்டு சுடரேற்றிப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

மலர் வணக்கத்தைத் தொடர்ந்து செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்ட உறவுகளுக்குச் சர்வதேச நீதிகோரிச் சுழற்சி முறையிலான அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் ஆரம்பமாகியது. அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரிப் பல்வேறு சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். போராட்டத்தின் ஒரு கட்டமாக செம்மணி மனிதப் படுகொலைக்கு நீதிவேண்டி கையெழுத்துத் திரட்டலும் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் ஆரம்பநாள் நிகழ்வில் சமயத் தலைவர்கள், வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தின் தலைவி யோகராசா கலாரஞ்சினி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், மக்கள் செயல் தன்னார்வ இளையோர் அமைப்பின் நிர்வாகத்தினர், செயற்பாட்டாளர்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், மூத்த தமிழ் அரசியல்வாதியுமான வீ.ஆனந்தசங்கரி, தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியப் பேரவையின் பங்காளிக் கட்சித் தலைவர் பொ.ஐங்கரநேசன், அரசியல், சமூகச் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், வடமாகாண சபையின் முன்னாள் கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன், தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஸ், கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன், வலி வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையத்தின் இணைப்பாளர் சி.கமலகாந்தன், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் செ.தனுபன், மூத்த எழுத்தாளர் மு.ஈழத்தமிழ்மணி, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நேற்று ஆரம்பமான அணையா விளக்குப் போராட்டம் தொடர்ச்சியாக மூன்று தினங்களுக்கு நடத்தப்படவுள்ளது. போராட்டத்தின் இறுதிநாளான நாளை புதன்கிழமை ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள நிலையில் அவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் பெரும் கவனயீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-26-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை வெளிப்படுத்தவேண்டும் அரசாங்கம்

## மொட்டுக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 24

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்படுவார்கள் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய உறுதிமொழி இன்னமும் நிறைவேற்றப் படவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் சுட்டிக் காட்டினார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப் பின்போதே அவர் இந்தவிடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி களைப் பிடிப்போம் என கத்தோலிக்க மக்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார். பிரதான சூத்திரதாரி தமது கட்சியின் தேசியப் பட்டியலில் இருந்ததையே அவர் மறைத்தார். அதே போல பேராயரையும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தவறாக வழிநடத்தினார்கள். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து 8 மாதங்கள் கடந்துள்ளன. ஆனால் இது தொடர்பில் இன்னும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணையின் தற்போதைய நிலையை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் வலியுறுத்துகின்றோம். பேராயரும் இந்த விடயத்தில் தலையிட்டு உரிய அழுத்தங்களை பிரயோகிக்கவேண்டும். ஏனெனில் பிரதான சூத்திரதாரிகள் மறைக்கப்படுகின்றனரா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது - என்றார். (எ-44)

**அறை வாடகைக்கு தேவை**

யாழ் மாநகர சபையை அண்டிய பகுதியில் பல்கலைக்கழக மாணவருக்கு தங்குவதற்கு அறை வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:

075 375 1921

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**SKY ACADEMY - ENGLISH CLASSES ADMISSION OPEN!**

Give your child the confidence to speak, write, and succed in English!

Classes Start in July
Classes Levels: Grade 1 to 5
Classes Conducted by: Yashodha Piumali

Location: No. 460, Navalar Road, Jaffna
Visit: www.skyacademy.lk
Call to Register : +94 77 922 4514

(CS/56601) E

## மின்சாரவேலியில் சிக்கி காட்டுயானை உயிரிழப்பு

அம்பாறையில் தமன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரனிகமப் பகுதியில் உள்ள வயல் ஒன்றில் மின்சார வேலியில் சிக்கி காட்டுயானை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். பெரனிகமப் பகுதிக்கு தினமும் இரவுவேளைகளில் காட்டுயானைகள் கூட்டம் கூட்டமாக வருகின்றன என்றும், பயிர்கள் மற்றும் வீடுகளைச் சேதப்படுத்துகின்றன என்றும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

# தகவல் இடர்பாடு ஆராய்ச்சி மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 24

ஊடக ஆய்வுகள் திணைக்களம், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடம் மற்றும் லிர்ன் ஏசியா நிறுவனம் ஆகியன இணைந்து, இலங்கையில் தகவல் இடர்பாடு ஆராய்ச்சியைத் தொடங்குதல் மற்றும் டிஜிற்றல் பின்னடைவை உருவாக்குவதற்கான மன்றத்தை நடத்தவுள்ளன. இந்த நிகழ்வு வடக்கு வாசல் விருந்தினர் விடுதியில் அடுத்தமாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ -25)

## நீங்கா நினைவலைகள்

14ஆம் ஆண்டு 15ஆம் ஆண்டு

பிறப்பு 05.02.1933



இறப்பு 30.06.2011

பிறப்பு 04.06.1935



இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்**

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

**திதி: அபரபக்க சதுர்த்தசி (24.06.2025)**

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

**திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்**

**திதி: பூர்பக்க அட்டமி (01.08.2025)**

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா......

நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா.......
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!**

என்றும் உங்கள் நினைவுகளுடன்

**மாதகல் மேற்கு,**
**மாதகல்.**

(CS/30115) J-1

**குடும்பத்தினர்**
**மகன் - 077 774 3185**

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 09 . 1939



மறைவு 21 . 06 . 2025

**திருமதி நித்தியலட்சுமி தெட்சணாமூர்த்தி**

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நித்தியலட்சுமி தெட்சணாமூர்த்தி அவர்கள் கடந்த (21.06.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும், மோகனதாஸ் (German), ரஞ்சனதாஸ் (Denmark), பிரேமினா (Canada), காலஞ்சென்ற சத்தியதாஸ், லோகதாஸ் (Denmark), பாலதாஸ் (தொழிநுட்ப உத்தியோகத்தர் நீர்பாசன பொறியியலாளர் அலுவலகம்-வவுனிக்குளம்) ஆகியோரின் அன்பு தாயாரும், கங்காதேவி (German), உதயகுமாரி (Denmark), மதியழகன் (Canada), சுகன்யா (Denmark), தாருணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கல்வி அமைச்சு வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவீணா-நிதர்ஷன், சாகித்தியன், Jenifer-Anders, Belinda-Landry, தனுஜா-ரவிக்குமார், ஹரிஷ், நிறோன், தறோன், திவ்யன், பிருதிவ், கிஷோபன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், Neishan, Neishara, Nitian, Rosaemilie, Olivia, Keaton, Hannah, Ashvani ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.